# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். 036/ந/2018

ஆணை எண். 40/2018

நாள் : 01/03/2018

திரு B. இரமேஷ்,
சென்னை – 600 117. – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
பல்லவபுரம் நகராட்சி,
பல்லவபுரம், சென்னை. – எதிர் மனுதாரர்

சென்னை, கீழ்கட்டளை, 10/1, துரைராஜ் நகர் முகவரியில் வசிக்கும் திரு B. இரமேஷ் அவர்களின் 22.02.2018 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 23.02.2018 அன்று பெறப்பட்டு, 36/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை, கீழ்கட்டளை, 10/1, துரைராஜ் நகர் முகவரியில் வசிக்கும் திரு B. இரமேஷ் என்பவர் கடந்த 20.12.2017 ஆம் நாளிலிருந்து தான் வசிக்கும் கீழ்கட்டளை துரைராஜ் நகர் பகுதியில் தெரு விளக்குகள் இல்லாமல் இருளில் மூழ்கி உள்ளதென்றும், 10.01.2018 நாளிட்ட கடிதத்தில் தெருவிளக்குகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என நகராட்சி ஆணையர் உறுதி அளித்தும், தெருவிளக்குகள் அமைக்கப்படவில்லை எனத் தெரிவித்து நகராட்சி ஆணையர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி முறையிட்டுள்ளார். மேலும், 1920–ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டப்பிரிவு 136–இன் படி, பொது சாலைகளுக்கு தெருவிளக்குகள் அமைத்துத் தரவேண்டியது பல்லவபுரம் நகராட்சி ஆணையரின் கடமை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

2. நகராட்சிப் பகுதிகளில் தெருவிளக்கு வசதி செய்து தருவது சம்பந்தமாக மேற்குறிப்பிட்ட சட்டப்பிரிவில் கீழ்க்காணும் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது :-

> “136 – provision for lighting public streets. – The Municipal Council shall, so far as the funds at its disposed permit, cause the public streets to be lighted and for that purpose shall provide such lamps and works as it thinks necessary”

எனவே, மேலே குறிப்பிடப்பட்ட சட்டப்பிரிவின்படி நடவடிக்கை மேற்கொண்டு, கீழ்க்கட்டளை துரைராஜ் நகர் பகுதியில் தெருவிளக்குகள் அமைத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பல்லவபுரம் நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

**2018–** ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், **01–**ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

6/3/18

பெறுநர்

1. **நகராட்சி ஆணையர்,**
   **பல்லவபுரம் நகராட்சி,**
   **பல்லவபுரம்,**
   **சென்னை.**

2. **திரு B. இரமேஷ்,**
   **10/1, துரைராஜ் நகர்,**
   **கீழ்க்கட்டளை,**
   **சென்னை – 600 117.**

நகல் : **முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,**
**பிரிவு அலுவலர்(நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு –3,**
**இ.கோ. / உதிரிகள்**